செய்தி வெளியீடு எண்:579 நாள்:17.07.2008

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை  600034

## இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் சீராய்வுக் கூட்டம்
## செய்திக்குறிப்பு – நாள் 17.7.2008

இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு தலைப்புகளில் பணிமுன்னேற்றம் குறித்த சீராய்வுக் கூட்டம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப, அவர்கள், அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையர் திரு.கே.கே.இராஜா அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தமிழகத்தில் உள்ள முக்கிய திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள், பல்வேறு நலத்திட்டங்கள், திருக்கோயில் வருவாயினை பெருக்கும் வழிகள், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நியாய வாடகை நிர்ணயம் செய்தல் குறித்த பணிகள் தொடர்பான அனைத்து அலுவலர்களின் சீராய்வுக்கூட்டம் 16.7.2008 ஆம் தேதி சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கற்பகாம்பாள் கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சிறப்புக்கூட்டத்தின் இரண்டாம் நாளான இன்று, 17.7.2008 சென்னை, வேலூர் ஆகிய மண்டலங்களில் உள்ள திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள், பக்தர்கள் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு நலத்திட்டங்கள், அசையும், அசையா சொத்துக்கள் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல், திருக்கோயில் வருமானம் அதிகரிக்கக்கூடிய வழிமுறைகள், சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் போன்ற அரசின் முக்கிய கவனத்தில் கொள்ளக்கூடிய பணிகள் குறித்து சீராய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.

மேற்படி கூட்டத்தில் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், பொறியாளர்கள், தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்), அனைத்து செயல் அலுவலர்கள், ஆய்வர்கள், தணிக்கை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இணை ஆணையர் (தலைமையிடம்)

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9